# அமுத இல்லம்



அவ்வை அகம்

அமுதசுரபி கூட்டமைப்பு அலுவலகம் மற்றும் மருந்து தயாரிப்புக்கூடம்

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

குறள்: 60

**அமுதசுரபி மகளிர் கூட்டமைப்பு**
**விவேகானந்த கேந்திரம் – நார்டெப்**
கல்லுவிளை,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 702

# அமுத இல்லம்

அமுதசுரபி சுயஉதவி குழுக்களின் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் வாழ்வில் நலம் பெருகவும், குடும்ப ஒற்றுமை நிலவவும் நாம் அனைவரும் பாடுபட்டு வருகிறோம். நல்ல குடும்ப அமைப்பு, குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் மன மகிழ்ச்சியைத் தருகிறது. குழந்தைகள் பாதுகாப்பு உணர்வுடன் வளரும் போது அவர்களுடைய கல்வித்திறமை வளர்கிறது. தன்னம்பிக்கை பெருகுகிறது. உடல் நலம் உறுதிப்படுகிறது. குடும்பத்தில் உள்ள அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்கும் போது குடும்பத்தில் வேண்டாத விஷயங்களான குடி, போதை மருந்து வேண்டாத பொருள்களில் பணத்தை வீண் செலவு செய்தல் ஆகியவை குறைகின்றன.



**1) குடும்ப ஒற்றுமைக்கு வழி**

நம் அமுத இல்லங்களில் குடும்ப ஒற்றுமையை வளர்க்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது குடும்பத்தில் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு வேளையாவது அனைவரும் ஒன்றாக உணவு உட்கொள்ள வேண்டும். சேர்ந்து பிரார்த்திக்கும் குடும்பங்கள் அதிக ஒற்றுமையுடன் விளங்குகின்றன. இதற்கு குலதெய்வ வழிபாடு மிகவும் அவசியம் ஆகும். நம்முடைய முன்னோர்கள் நம்முடைய நலனைக்கருதி வழிபட்ட தெய்வத்தை நாமும் வழிபடுவோம். நம் குழந்தைகளும் அவ்வாறே செய்ய வழிகாட்டுவோம்.



**2) எங்கள் இல்லம் இனிய இல்லம்**



நம் வீட்டில் நம் நல்ல உணர்வுகளைத் தட்டி எழுப்பும் படங்களும், பொருள்களும் இருக்க வேண்டும். குலதெய்வத்தின் படம், எழுச்சியூட்டும் தேசத் தலைவர்களின் படம், ஆன்மீகத் தலைவர்களின் படம் ஆகியவற்றால் பிறரும் இக்குடும்பத்தின் தன்மையைப் பற்றி புரிந்துகொள்ளும் வழி அமையும். ஸ்ரீராமகிருஷ்ணர், சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி, பாரதியார், காமராஜர், திருவள்ளுவர் போன்ற நல்லவர்களின் படம் வீட்டில் நல்ல சூழ்நிலையை உண்டாக்கும்.

**3) நாளும் நன்னூல் ஓதுவோம்**



அதுபோலவே நம் வீட்டு மேசை மேல் திருக்குறள், பாரதியார் கவிதைகள், சுவாமி விவேகானந்தரின் நூல்கள், அகிலத்திரட்டு போன்றவை இருக்குமானால் நம் மனத்தில் தளர்ச்சி வரும்போதும், நம்பிக்கை இழக்கும் போதும் அந்நூல்கள் நமக்கு உற்சாகமூட்டும்.

நம்முடைய ஓய்வு நேரத்தைக் குறிப்பாக பெண்கள் ஓய்வு நேரத்தை வீண் செய்யாமல் வாரம் ஒரு தடவையோ, முடிந்தால் தினமுமோ, ஒன்றாய் உட்கார்ந்து அபிராமி அந்தாதி ஓதுதல், திருவாசகம் ஓதுதல், திருக்குறள் ஓதுதல், ராமாயணம் வாசித்தல் போன்ற நல்ல பழக்கங்களில் ஈடுபட்டால் மன நிம்மதி பெருகும்.

**4) பகிர்ந்து அனுபவிக்கும் இன்பம் பலமடங்கு ஆகும்**

குடும்பத்தில் உள்ள தனி நபர் எவரும் எந்த நல்ல விஷயத்தை அனுபவித்தாலும் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்தே அனுபவிப்பது என்ற வழக்கம் வேண்டும். மற்றவர்களை விட்டு விட்டு திரைப்படத்திற்குப் போவதோ, நல்ல பொருள்களை உண்பதோ, புத்தாடை அணிவதோ, சிறுசிறு இன்பங்களை நுகர்வதோ தவறு ஆகும். நல்லது எதையும் குடும்பத்தினருடன்

சேர்ந்து அனுபவிக்க வேண்டும். மோசமான திரைப்படம், தொலைக்காட்சி, புத்தகங்கள் இவை கரையான் அரிப்பது போல் நம் மனத்தைப் பாழாக்கி, குடும்ப ஒற்றுமையைப் பாழ்படுத்தி விடும். வருமுன் காத்தலே, வந்தபின் காத்தலை விட உயர்ந்தது.



**5) உணவைப் பிரசாதம் ஆக்குக**




நாம் உண்ணும் உணவு எவ்வளவு எளிமையாக இருந்தாலும் அதை சுவாமி படத்திற்கு முன்னால் வைத்து நிவேதனம் செய்துவிட்டு நாம் பிறகே உண்ண வேண்டும். இதனால் உணவின் தூய்மையும், புனிதத்தன்மையும் அதிகரிக்கும். காக்கைக்குச் சோறு வைத்தல், நாய்க்கு சோறு போடுதல் இவையும் குடும்ப ஒற்றுமையை வளர்க்கும்.

**6) குடும்ப வழக்கத்தைக் குறிப்பிட்டு வளர்ப்போம்**

தங்கள் குடும்ப வழக்கத்தின்படி திருநீறு, திருமண், சந்தணம், குங்குமம் அணிய வேண்டும்.



**7) ஆலயம் தொழுவது சாலவும் நன்று**



உங்கள் மனத்திற்குப் பிடித்த தெய்வத்தின் திரு நாமத்தை ஒவ்வொரு நாளும் நூறு தடவையாவது தவறாமல் ஜபம் செய்ய வேண்டும்.

## 8) நமக்கு வேண்டும் நல்ல பழக்கங்கள்



நம் வீட்டை புனிதக் கோவிலாகக் கருத வேண்டும். வீட்டில் துளசி மாடம், வீட்டு வாசலில் கோலம் போடுதல், காலையும் மாலையும் விளக்கேற்றுதல், சுவாமிக்கென்று வீட்டில் தனி அறையோ, தனி இடமோ ஒதுக்குதல் இவையெல்லாம் வீட்டில் மங்களகரமான சூழ்நிலையை உண்டாக்கும்.


குறிப்பாக காலையிலும், மாலையிலும் விளக்கு ஏற்றும் வழக்கம் வீட்டில் கட்டாயம் இருக்கவேண்டும். எறும்புகள் தின்னும்படி மாக்கோலம் தான் போடவேண்டும்.

## 9) உயிர்ச்சக்தி ஓங்கி வளர



வீட்டில் தண்ணீர்ப் பானை, பூஜை அறை, ஆடு மாடுகள் கட்டும் இடம், செடி கொடிகள், பூந்தொட்டிகள் இருக்கும் இடம் இவற்றால் வீட்டின் உயிர்ச்சக்திகள் தூண்டப்படுகின்றன. வீட்டு வாசலிலோ, பின்புறத்திலோ ஒரு மரம் இருந்தால் கூட அவ்வீட்டில் வசிப்பவர்களின் மனநிலை உயர்வாக இருக்கும்.

## 10) தூய்மை, எளிமை, உயர்வு



பொதுவாக நம் வாழ்வில் சிக்கனமும், எளிமையும் வந்தால் நம்எண்ணங்கள் உயரும். அதற்கேற்ப நாம் பொது இடங்கள் ஆகிய குளம், கோவில், தெரு ஆகியவற்றையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நம் வீடும் சுத்தமாக இருந்தால் நம் மனத்தில் தூய்மையும், எழுச்சியும் வரும்.

## 11) விருந்தோம்பும் பண்பு



வீட்டுக்கு வரும் விருந்தினர் நம் குடும்பத்தின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு என்றே வருகிறார்கள். விருந்தோம்பும் பண்பு, தெய்வ வழிபாட்டுக்குச் சமமாகக் கூறப்பட்டுள்ளது. விருந்தினரை நன்கு உபசரிக்கும் குடும்பங்களில் ஒற்றுமை அதிகரிப்பது கண்கூடாக காணக் கிடைக்கிறது.

## 12) இருக்கிறது என்று கூறுவோம்; இல்லை என்று சொல்லமாட்டோம்




வீட்டு வாசலில் வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் ஒரு கைப்பிடியாவது தானம் கொடுக்க வேண்டும். இதற்காகவே அமுத சுரபி திட்டத்தில் -ஊருக்கு உழைத்திடல் யோகம், நாடு நலம் பெற, நம் பண்பாடு தழைக்க, உலகம் உய்ய, மனிதகுலம் வாழப் பிரார்த்திப்போம், தொண்டு புரிவோம் என்ற பிரார்த்தனையுடன் பிடி அரிசித் திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

## 13) கல்வியும், திறமை வளர்ச்சியும்



நம் குழந்தைகளைக் கட்டாயம் பள்ளிக்கூடத்தில் சேர்த்து அவர்கள் ஒழுங்காகக் கல்வி கற்கும்படி வற்புறுத்த வேண்டும். ஒவ்வொரு எளிய மனிதரும் செல்வந்தர் ஆகக்கூடிய வாய்ப்பை கல்வி மட்டுமே தரும். நம்முடைய குழந்தை நற்கல்வி பெறுவது ஆசிரியரின் பொறுப்பு என்று விட்டு விடக்கூடாது. நாமும் நம் குழந்தையின் தனிச்சிறப்புக்களைப் புரிந்து கொண்டு வளர்க்க வேண்டும். விளையாட்டு, கலைகள், இவற்றில் நம் குழந்தைகள் திறமை கொண்டிருந்தால் அத்துறைகளில் அவர்கள் சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு உதவ வேண்டும்.

## 14) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



வீட்டில் உள்ள முதியவர்களை நாம் கவனத்துடனும், அன்புடனும், பாதுகாத்து காப்பாற்ற வேண்டும். நம் தந்தை, தாயையும், மாமனார், மாமியாரையும் நாம் எப்படி நடத்துகிறோம் என்பதை நம் குழந்தைகள் கவனித்துப் பார்க்கிறார்கள். அதுபோலவே நாளைக்கு நம்மையும், அவர்கள் நடத்துவார்கள். அதுமட்டுமின்றி ஆடி அமாவாசை, தை அமாவாசை புரட்டாசி மாதத்துத் தேய்பிறை ஆகியவற்றில் நம் குடும்ப வழக்கத்தின்படி மூதாதையர் வழிபாடு செய்யவேண்டும். இதன்மூலம் நம் குழந்தைகள் அறிவுத் தெளிவும், குடும்பப் பாசமும் கொண்டவர்களாக வளருவார்கள்.

## 15) பணிவும் வணக்கமும் பாரதப் பண்பு



தினம் நம் வீட்டில் உள்ள பெரியவர் களை வணங்குதல், மற்றவர்களைச் சந்திக்கும் சமயத்தில் வணங்கி வரவேற்றல் வேண்டும். நமஸ்தே, ஹரி ஓம், ஓம் சக்தி, அய்யா உண்டு என்று முதலிய நல்வாசகங்களை உச்சரித்து வரவேற்க வேண்டும்.

## 16) ஊருடன் கூடிவாழ்க



அக்கம் பக்கத்தில் இருப்பவர் நடத்தும் பஜனை, கோவில் திருவிழா, சத்சங்கம் ஆகியவற்றில் நாமும் பங்கேற்க வேண்டும். அப்போது தான் நம் வீட்டில் நல்லது, கெட்டது நடக்கும் போது மற்றவர்கள் நம் சுகதுக்கங்களில் வந்து பங்கேற்பார்கள். திருமணம், பால் காய்ச்சுதல் போன்ற தனியார் நிகழ்ச்சிகளிலும் கட்டாயம் நாம் சென்று வர வேண்டும்.

இவையெல்லாம் சமுதாயத்தைப் பலப்படுத்தும் சக்திகள் ஆகும். குறிப்பாக திருவிளக்குப் பூஜை, பஜனை குழு ஆகியவற்றில் நாமும் பங்கேற்க வேண்டும்.

## 17) தலைமைப் பொறுப்பே தகுதியின் அளவுகோல்



பொதுக் காரியங்களில் பங்கேற்றும், தலைமை வகித்தும் பொறுப்புக்களை ஏற்கும் திறமையை நாமும் வளர்த்துக் கொண்டு குழந்தைகளிடமும் வளர்க்கவேண்டும்.

## 18) கண்ணான குழந்தைகளைக் கண்காணிப்போம்

நம் வீட்டுக் குழந்தைகளை சமய வகுப்பு, நன்னூல் ஓதுதல் போன்ற நல்ல வழக்கங்களுக்குப் பழக்கப்படுத்த வேண்டும். அவர்கள் எங்கே போகிறார்கள். யாருடன் பழகுகிறார்கள். என்ன காட்சிகளைக் காண்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.





இவற்றின் மூலம் நம் குடும்பத்தில் ஒற்றுமையும், அமைதியும் பெருகும். குழந்தைகள் உற்சாகமும், தன்னம்பிக்கையும் கொண்டு வாழ்வார்கள். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று சும்மாவா சொன்னார்கள்!


*மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:*

**அமுதசுரபி மகளிர் கூட்டமைப்பு**

தொழிற்நுட்ப உதவி

விவேகானந்த கேந்திரம் – நார்டெப்

கல்லுவிளை, கன்னியாகுமரி மாவட்டம் – 629 702

போன்: 04652 - 270755

E-mail: ngc_amuthasurabi@dataone.in